## ஜனவரி – 04 – வியாழன்

### புனித எலிசபெத்

### ஆண்டவர் முன்னிலையில் மகிழ்ந்து பாடுங்கள்:திபா. 98:9

---

### முதல் வாசகம் : 1 யோவான் 3 : 7 - 10

என் அன்பார்ந்த பிள்ளைகளே, எவரும் உங்களை நெறிதவறச் செய்யவிடாதீர்கள். கிறிஸ்து நேர்மையாளராய் இருப்பதுபோல் நேர்மையாய்ச் செயல்படுபவர் நேர்மையாளராய் இருக்கின்றார். பாவம் செய்து வருகிறவர் அலகையைச் சார்ந்தவர் ஏனெனில் தொடக்கத்திலிருந்தே அலகை பாவம் செய்து வருகிறது. ஆகவே அலகையின் செயல்களைத் தொலைக்கவே இறைமகன் தோன்றினார். கடவுளிடமிருந்து பிறந்தவர் எவரும் பாவம் செய்வதில்லை. ஏனெனில் கடவுளின் இயல்பு அவரிடம் இருக்கிறது. கடவுளிடமிருந்து பிறந்தவராயிருப்பதால் அவரால் பாவம் செய்ய இயலாது. நேர்மையாய்ச் செயல்படாதவரும், தம் சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாத வரும் கடவுளி டமிருந்து வந்தவர்களல்ல. இதனால் கடவுளின் பிள்ளைகள் யாரென்றும் அலகையின் பிளளைகள் யாரென்றும் புலப்படும்.

**பதில்பாடல்** : மாந்தர் அனைவரும் நம் கடவுள் அருளிய விடுதலையைக் கண்டனர்.

### நற்செய்தி : யோவான் 1 : 35 - 42

அக்காலத்தில் யோவான் தம் சீடர் இருவருடன் மீண்டும் அங்கு நின்று கொண்டிருந்தார். இயேசு அப்பக்கம் நடந்து சென்று கொண்டிருந்தார். யோவான் அவரைக் கூர்ந்து பார்த்து, "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி" என்றார். அந்தச் சீடர் இருவரும் அவர் சொன்னதைக் கேட்டு இயேசுவைப் பின் தொடர்ந்தனர். இயேசு திரும்பிப் பார்த்து, அவர்கள் தம்மைப் பின் தொடர்வதைக் கண்டு, "என்ன தேடுகிறீர்கள்?" என்று அவர்களிடம் கேட்டார். அவர்கள், "ரபி, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?" என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், "வந்து பாருங்கள் "என்றார். அவர்களும் சென்று அவர் தங்கியிருந்த இடத்தைப் பார்த்தார்கள். அப்போது ஏறக்குறைய மாலை நான்கு மணி. அன்று அவர்கள் அவரோடு தங்கினார்கள். யோவான் சொன்னதைக் கேட்டு இயேசுவைப் பின்தொடர்ந்த இருவருள் "அந்திரேயா ஒருவர். அவர் சீமோன் பேதுருவின் சகோதரர். அவர் போய் முதலில் தம் சகோதரரான சீமோனைப் பார்த்து, "மெசியாவைக் கண்டோம்" என்றார். "மெசியா" என்றால் அருள்பொழிவு பெற்றவர் என்பது பொருள். பின்பு அவர் சீமோனை இயேசுவிடம் அழைத்து வந்தார். இயேசு அவரைக் கூர்ந்து பார்த்து, "நீ யோவானின் மகன் சீமோன். இனி "கேபா" எனப்படுவாய் என்றார். "கேபா" என்றால் "பாறை" என்பது பொருள்.

**தியானம்:**2018ம் வருடத்தில் காலடி வைத்துள்ள எமக்கு, இவ்வுலகில் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி இறைமகன் இயேசுவைத்தேடி நாடவேண்டுமென இன்றைய நாளுக்கான நற்செய்தி அறிவிக்கின்றது. ஆண்டவர் இயேசுவைத் தேடும்போது அவர் எங்கள் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைக்கின்றார். எமது செய்கை மற்றும் நடத்தையால் மனிதர்களைத் திருப்திப்படுத்த முடியாதெனினும், இறைவனைத்தேடி நாடும்போது, இறைபணிக்கென நாமும் அழைக்கப்படுவோம் என்பதனையே நற்செய்தி வேறுவிதமாக எமக்குப் படிப்பிக்கின்றது. புதிய வருடத்தில் நாம் எமது அன்றாட கருமங்களில் என்னவிதமான புதிய முயற்சிகளில் ஈடுபடலாமென இவ்வுலகத்திற்கு அமைவான திட்டங்கள் பல தீட்டியிருக்கலாம். எனினும், நுகர்வுக் கலாச்சாரத்தில் துரித கதியில் வாழும் எம்மை இன்றைய நற்செய்தி வழியாக ஆண்டவர் இயேசு "என்ன தேடுகிறீர்கள்" என்று வினாவுவது மட்டுமல்ல, தமது இரக்கத்தின் அன்பை சுவைத்து மகிழ "வந்து பாருங்கள்" என அழைக்கின்றார். ஆதலால், இப்புதிய வருடத்தில் நாம் ஒவ்வொருவரும் ஆண்டவர் இயேசுவிலே நிலைத்திருக்கவும், அவரையே எமக்கு உறுதியான ஊன்றுகோலாகப் பற்றிப்பிடிக்கவும் முன்வருவோம். இவ்வுலகு சார்ந்த மாயக்கவர்ச்சி, தப்பான கொள்கைக்கமைந்த போதனை, தனி மனித சுயகௌரவம் என்பவற்றால் கவரப்பட்டுள்ள நாம் இப்புதிய வருடத்தில் இறை சிந்தனைக்கு முதலிடம் கொடுப்போம். நேரம் கிடைக்கும் போதெல்லாம் இறை வார்த்தையை வாசித்து அதனடிப்படையில் தியானிப்பதற்கு முயற்சி செய்வோம். அன்னையாம் கத்தோலிக்க திருச்சபையின் வழிநடத்துதலில் அமைந்து ஆண்டவருக்கான வழியைச் செம்மைப் படுத்துவோம். நாம் அறியாத வகையில் எம்மிடையே நிற்கும் தெய்வத்தை தேடிச்சென்று அவரை எம் இதயத்தில் அரசராக்குவோம்.